DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.309/15

Deposition of Witness: PW 7

| | |
|---|---|
| Name துரைபாண்டி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.12.2021

கு.வி.மு.ச.பிரிவு **244** ன் கீழ் விசாரணை

நான் சிவலிங்கநாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். பால் எடுக்கும் வேலை செய்துவருகிறேன். கடந்த 4.12.14 ம் தேதியன்று நானும், முருகன், ராஜேஷ், ஜெயபிரகாஷ் ஆகியோருடன் தேனி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றோம். போலிசார் தான் எங்களை அழைத்து சென்றார்கள். நாங்கள் காவல்நியைம் சென்றபோது சுருளியம்மாள், விஜயபாண்டி, சௌந்தராஜ்பாண்டி, ராமசந்திரன், வேலுச்சாமி, சுரேஷ் ஆகியோர்கள் அங்கிருந்தார்கள். அவர்களை மாலை 5 மணிவரை காவல்நிலையத்தில் உட்கார வைத்துவிட்டு, ராமசந்திரனிடம் பத்திரத்தை வாபஸ் பண்ணவேண்டும் என்று சொன்னார்கள். அவ்வாறு சொன்னது யார் என்று தெரியாது. பின்பு போலிசார், சுருளியம்மாள், சௌந்தராஜன், விஜயபாண்டி ஆகியோர்களை அழைத்து சென்றார்கள். அதன்பின் நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம்.